


ஒன்றிய அரசு நீட்டை ரத்து செய்ய வலியுறுத்தி திராவிட மாணவர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடைபெற்றது. இதில் இந்தியா கூட்டணி கட்சி தலைவர்கள் கலந்து கொண்டு கண்டன முழக்கமிட்டனர்.

### விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார்!

விழுப்புரம், ஜூன் 21-

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியில் அடுத்த மாதம் ஜூலை 10ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

இந்த இடைத் தேர்தலில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் கடந்த 14ஆம் தேதி முதல் தொடங்கியது.

இந்நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் அன்னியூர் சிவா உயர் கல்வித்துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி, டாக்டர் ஜெகத்ரட்சகன் எம்பி, அமைச்சர் சி.வெ. கணேசன், விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் கௌதம சிகாமணி ஆகியோர் முன்னிலையில் விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரசேகர் இடம் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

இதையடுத்து தி.மு.க. சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து விக்கிர வாண்டி மேற்கு ஒன்றியம் முட்டத்தூர், செ. புதூர், செ.கொளத்தூர், நகர், ஆகிய ஊராட்சிகளில் உள்ள தி.மு.க. நிர்வாகிகள் சந்திப்புமற்றும் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்.

ஆலோசனை கூட்டத்தில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்,

விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்த வெற்றி வேட்பாளர் அன்னியூர்சிவாவை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும்.

எதிர்த்து நிற்கின்ற மற்ற வேட்பாளர்கள் டெபாசிட் இழக்கும் வகையில் ஓட்டு வங்கி சதவீதத்தை நாம் பெற்றுத் தர வேண்டும்.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க ஸ்டாலின் அவர்கள்செய்த பல்வேறு திட்டங்களையும் சாதனைகளையும் தேர்தல் பணியில் நியமிக்கப் பட்டுள்ள பொறுப்பாளர்கள், நிர்வாகிகள் ஆகியோர் கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீடாகச் சென்று திண்ணை பிரச்சாரம் மேற்கொண்டு உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

இதில் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் 101 தொடர் நிகழ்ச்சிகள்

## பேட்டை பகுதி 7 நரிக்குறவர் குடும்பங்களுக்கு தற்காலிக வீடு!

### மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார்! அப்துல் கையூம் தலைமையில்!

நெல்லை.ஜுன்.21-

நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்த நாளை முன்னிட்டு தொடர் 101 நிகழ்ச்சிகள் மிக சிறப்பாக நடைபெற்று வருகிறது.அதன் படி நெல்லை மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம் தலைமையில் பேட்டை பகுதி 18 ம் வார்டில் உள்ள நரிக்குறவர் காலனியில் தார்பாயில் வசித்து வரும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்த 7 நபர்களுக்கு தற்காலிக வீடு அமைத்துக் கொடுக்கும் நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று துவக்கி வைத்தார்.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர்,இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி,நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவுறுத்தலின்படி நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்தநாள் தொடர் 101 நிகழ்வாக நடைபெற்று வருகிறது.

அதன்படி இலவச மருத்துவ முகாம் மத்திய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை ஏற்பாட்டில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.இந்த முகாமில் பொது மருத்துவம், காது, கண், பல் மருத்துவ சிகிச்சை, மூட்டு மற்றும் கால் வலிக்கான ஆயுர்வேத ஆலோசனை என பல்வேறு மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டது.

இதில் பொதுமக்கள் சுமார் 500 பேர்கள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

அதனை தொடர்ந்து 55,56,57,58,59,60, 61வது நிகழ்வாக பேட்டை பகுதி 18 வார்டில் உள்ள நரிக்குறவர் காலனியில் தார்ப்பாயில் வசித்து வரும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்த 7 நபர்களுக்கு தற்காலிக வீடு அமைத்துக் கொடுக்கும் நிகழ்வு மாநகர துணை செயலாளர் அப்துல்கையூம் தலைமையில் நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் 18 வது வார்டு மாமன்ற உறுப்பினர் சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று வீடுகளை துவக்கி வைத்து அப்பகுதி மக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான், மாவட்ட வர்த்தக அணி தலைவர் அவதார் ஷாஜகான், மாநகர விவசாய அணி துணை அமைப்பாளர் காந்தி,51வது வட்ட செயலாளர் ராபர்ட் செல்லையா, மாநகரப் பிரதிநிதி சிவா, மாணவர் அணி வினோத், ராஜா அப்பாஸ், நெல்லை பேட்டை பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் சௌபர் சாதிக் ஆகியோர் செய்திருந்தனர்.

நிகழ்வில் மாவட்ட, மாநகர, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், மாநகர சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### முனு ஆதி

ஜூன் 21 (2005)



தாம்பரம் பகுதியில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவர்.

நகர்மன்றத் தலைவராக, தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக நான்கு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

தமிழக சட்டப்பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

மும்முனைப் போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிடத்தின் மூத்த குயில்! எங்கே எங்கே?

**(உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் 19 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று - 20.6.2024)**



சிக்கலிலே பிறந்தவரே!
ஐயா! எங்கள்
சீர்திருத்தப் பெருங்கவியே!
சிலபேர் தங்கள்
முக்கலையும் முனகலையும்
பாடல் என்று
முத்தமிழை வதைத்துக்கொண்
டிருந்த நேரம்
விக்கலுக்குத் தண்ணீர்போல்
கவிதை தீட்டி
விதம்விதமாய் உவமைகளில்
புதுமை காட்டித்
தக்கபுகழ் கொண்டவரே!
விண்மீன் கூட்டத்
தமிழ்வானில் முழுநிலவே!
மறைந்தா போனீர்?

சர்க்கரைத்" தேன் மழை" பொழிந்தும்
"அமுதும் தேனும்"
சந்தங்க ளில்பிழிந்தும்
தமிழன் னையைச்
சொக்கவைத்த கவிச்சிகரம்!
ஆமாம், நீங்கள்
"சுவரும்சுண் ணாம்பும்" அல்ல
உதிர்வ தற்கு!
பக்குவத்தில் பழுத்தவரே!
பண்பின் ஊற்றே!
பாவேந்தர் பரம்பரைக்குத்
தலைமை தாங்கித்
திக்கனைத்தும் சுற்றிவந்த
கவிதைக் கோவே!
திரும்பிவராத் திசைநோக்கிப்
பறந்தா போனீர்?

"உருக்குலையா மங்கைஒளி
முகத்தை.." என்றே
உயிரோட்டக் கவிவரிகள்
அன்று தீட்டித்
திருக்குவளைத் திருமணத்தில்
தலைவ ருக்குத்
தித்திக்கும் வாழ்த்துகளைத்
தெளித்தீர்! எந்த
நெருக்கடிகள் வந்தாலும்
"கலைஞர்" அந்த
நிகழ்ச்சியினை மறக்காமல்
நேசித் தாரே!
கருக்கலிலே கண்விழிக்கும்
குவளை என்றீர்!
கண்விழிக்க மறந்துவிட்டேன்
உறங்கிப் போனீர்?

கன்னடத்தில் "தங்கவயல்"
கவிய ரங்கில்
"கவிஞர்களின் பொற்காலம்
கலைஞர் காலம்!
மன்னர்மகா மன்னர்களின்
காலத் துக்கும்
மகத்தான காலம்இது!"
என்று நீங்கள்
பொன்னுருக்கி வார்த்தாற்போல்
பொழிந்த நேரம்
பொங்கியதே கைத்தட்டல்
அலைகள்! அந்த
மின்னொளியின் எழில்வடிவம்
கண்முன் வந்து
மேடைகட்டி நிற்கிறதே!
என்ன செய்வோம்?

வந்தாரை வரவேற்று
மகிழும் நெஞ்சும்
வாசல்வரை வந்துவழி
யனுப்பும் பாங்கும்
நந்தாவி ளக்கொளியின்
சிரிப்பும், சோழ
நாட்டுக்கே உரியவிருந்
தோம்பற் பண்பும்
சிந்தாமல் சிந்தும்நகைச்
சுவையும், மேனிச்
சிவப்புக்கு மெருகூட்டும்
கருப்புத் துண்டும்
அந்தோ!வே றெங்கிந்த
அழகைக் காண்போம்?
அழுகின்ற தமிழன்னை
குரல்கேட் டீரோ?

பறக்கின்ற விமானத்தில்,
மிதக்கும் கப்பற்
பயணத்தில், புகைவண்டித்
தொடரில் என்று
சிறக்கின்ற வகையெல்லாம்
தமிழ்சி றக்கச்
செய்தீரே! கவிஞர்களின்
கூட்டத் தோடு!
இறைக்கட்டும் கண்ணீரை
விழிகள் என்றே
ஏன்இன்று தனிப்பயணம்
மேற்கொண் டீர்கள்?
அறுக்கட்டும் இதயத்தைச்
சோகம் என்றே
"ஆடிஅடங் கும்வாழ்வை"
மெய்ப்பித் தீரோ?

பூமலரும் முகமெங்கே?
துயரில் கூட
புன்னகைக்கும் இதழெங்கே?
தேன்வ ழிந்து
பாமலரும் கவிஇதயம்
எங்கே? எங்கள்
பகுத்தறிவுச் சிங்கத்தின்
செம்மாப் பெங்கே?
நாமலரும் போதெல்லாம்
தமிழ்ம ணக்க
நடைபோட்ட தன்மானக்
கவிஞன் எங்கே?
தேமதுரத் தமிழ்கூவி
உலக எந்த
"திராவிடத்தின் மூத்தகுயில்"
எங்கே? எங்கே?



கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**

"ஒப்பாரும் மிக்காரும்
என்று மில்லா
உயர்கவிஞர் என்நண்பர்
சுரதா! யாரும்
தப்பாக அவர்பற்றிப்
பேசு வாரேல்
சகியேன்!" என் றுரைப்பாரே
கலைஞர்! அந்த
நட்புக்கோர் இலக்கணமாய்
வாழ்ந்து காட்டி
நடுகல்லில் புகழ்நாட்டி,
மறைந்த பின்னும்
எப்போதும் வாழ்கின்றீர்
எங்க ளோடு!
என்றும்எங்கள் நினைவலைகள்
உங்க ளோடு!

### காங்கேயம் - தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில்

## ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் கழக நிர்வாகிகளை இன்று சந்திக்கிறார்!

### மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!

சென்னை, ஜுன் 21 -

திருப்பூர் தெற்கு மாவட்டம், காங்கேயம், தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி செயலாளர் கே.இ.பிரகாஷ் கழக நிர்வாகிகளை சந்திக்கிறார். இதில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என். கயல்விழி செல்வராஜ் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல. பத்மநாபன் அறிக்கை.

திருப்பூர் தெற்கு மாவட்டம், காங்கேயம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வெள்ளக்கோவில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளுக்கு இன்று (21.06.2024 - வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணியளவில் வெள்ளக்கோவில், புதுப்பை சாலையில் உள்ள பொன்னுச்சாமி மண்டபத்திலும், மூலனூர் கிழக்கு ஒன்றியம், மூலனூர் மேற்கு ஒன்றியம், மூலனூர் பேரூர், கன்னிவாடி பேரூர் பகுதிகளுக்கு காலை 11.00 மணியளவில் மூலனூர், புதுப்பை சாலையில் உள்ள எஸ்ஜேம் மண்டபத்திலும், தாராபுரம் ஒன்றியம் தாராபுரம் நகரம் கொளத்துப்பாளையம் பேரூர் சின்ன க்கம் பாளையம் பேரூர் பகுதிகளுக்கு மதியம் 12.30 மணியளவில் தாராபுரம் பெரியார் சிலை அருகில் உள்ள சிவரஞ்சனி மஹாலிலும், குண்டடம் கிழக்கு ஒன்றியம் குண்டடம் மேற்கு ஒன்றியம் ருத்ராவதி பேரூர் பகுதிகளுக்கு மதியம் 3.30 மணி அளவில் குண்டடம் கோவை சாலையில் உள்ள சமுதாய கூடத்திலும், காங்கேயம் வடக்கு ஒன்றியம், காங்கேயம் தெற்கு ஒன்றியம், காங்கேயம் நகர பகுதிகளுக்கு மாலை 5,00 மணியளவில் காங்கேயம், திருப்பூர் சாலையில் அமைந்துள்ள வெங்கடேஸ்வரா மஹாலிலும், சென்னிமலை கிழக்கு, சென்னிமலை மேற்கு, சென்னிமலை பேரூர் பகுதிகளுக்கு மாலை 6.30 மணியளவில் சென்னிமலை, பசுவபட்டி அம்மன் காட்டேஜில் கழக நிர்வாகிகளை சந்திக்கிறார்.


**தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் - திட்ட சரகம் (ஊரகம்)**
மேற்பார்வை பொறியாளர், திட்ட சரகம் (ஊரகம்)
485, MTB கட்டிடம், 2வது தளம், அண்ணா சாலை,
நந்தனம், சென்னை – 600 035. மின் அஞ்சல்: sespc1@gmail.com

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்: SE/PC(R)/DB/08/2024-25 நாள்: 19.06.2024**

| வேலையின் பெயர் | வேலையின் தோராய மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தாலுகா, தோப்பூர் கிராமத்தில் புல எண்.89/4A, 89/8A1–ல் வணிக வளாகம் (பிளாக் 1 – Ground + 4 Floors, பிளாக் - 2 Stilt + 4 Floors) கட்டுமானத்தில் மின்தூக்கி ஏற்பாடுகளை வழங்குதல் | ரூ. 130.48 ( incl GST @ 18%) |

1. ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏனைய ஆவணங்களுக்கு https://tntenders.gov.inல் தெரிந்து கொள்ளவும். 2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கும் காலம் மற்றும் சமர்ப்பிக்கப்படுவதற்கான **நாள் மற்றும் நேரம் 28.06.2024 காலை 11.00 மணி முதல் 12.07.2024 காலை 11.00 மணி வரை.** 3. ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் திறக்கப்படும் **நாள் மற்றும் நேரம் 12.07.2024 மாலை 3.00 மணி.** 4. விரிவான ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் காணலாம்.

செ.ம.தொ.இ/1993/ஒப்பந்தப்புள்ளி/2024

**மேற்பார்வை பொறியாளர், திட்ட சரகம் (ஊரகம்).**




நெல்லை மாவட்டம் நாங்குநேரி வருவாய் ஆய்வாளர் மாதவசங்கர் விபத்தில் மூளைச் சாவு ஏற்பட்டு மறைவெய்தினார். அன்னாரது உடல் உறுப்புகள் நெல்லை அரசு மருத்துவமனையில் தானம் செய்யப்பட்டது. மறைந்த மாதவசங்கர் இல்லத்திற்கு மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் நேரில் சென்று அன்னாரது உடலுக்கு மாலை அணிவித்து அரசு மரியாதை செலுத்தினார். உடன் மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜு உள்ளார்.